செ. கு. எண்: 115 நாள் :18.06.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 18.6.2014

கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு K. ரமேஷ்குமார் அவர்கள் 23.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு V.இளங்கோவன் அவர்கள் 24.3.2014 அன்று நெஞ்சு வலி ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு O.செல்வராஜ் அவர்கள் 26.3.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு S. பிரபாகரன் அவர்கள் 26.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திருமதி ஜெயகாந்தி அவர்கள் 27.3.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி போக்குவரத்து பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு A.சண்முகம் அவர்கள் 28.3.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் நகர போக்குவரத்து பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.சுரேஷ்குமார் அவர்கள் 28.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், மாரனேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு J. சௌந்தரராஜன் அவர்கள் 28.2.2014 அன்று திருத்தங்கல் – சிவகாசி பிரதான சாலை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 29.3.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், மதுரவாயல் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J.அந்தோணி ஜோசப் அவர்கள் 29.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்ட ஆயுதப் படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ஜான் வென்னல் அவர்கள் 9.3.2014 அன்று கன்னியாகுமரி மாவட்டம், மணவாளகுறிச்சி பாலம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 29.3.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் செல்வராஜ், ஜெயகாந்தி; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பிரபாகரன், சண்முகம், சௌந்தரராஜன்; தலைமைக் காவலர்கள் ரமேஷ்குமார், இளங்கோவன், சுரேஷ்குமார், அந்தோணி ஜோசப்; ஆயுதப்படை காவலர் ஜான் வென்னல் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**